**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**<u>அசல் வழக்கு எண்</u> : 488/2021**

**DW1 – திருமதி. விஜயா (எ) யமுனா, க/பெ. தேவராஜ்**
**04.12.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>நேரம் 13.20 மணி</u>**

என் கணவர் இறந்தபிறகு யாருடைய துணையுடன் இந்த வீட்டிற்கு வர அனுமதி பெற்றேன் என்றால் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு நான் மனு செய்தேன், அவர்கள் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தார்கள். உதவி ஆய்வாளர் ஜானகி அவர்கள் வீட்டின் சாவியை என்னிடம் ஒப்படைத்தார்கள். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு கொடுத்த மனுவை வைத்துள்ளேன். முதல் வாதிக்கு என் கணவர் அண்ணன் என்பதால் அவர் அனுமதியுடன் தான் நான் வீட்டிற்குள் வந்தேன் என்றால் அது தவறு. ஜோதி என்பவர் அன்றைய தினம் காவல் நிலையத்திற்கு வரவில்லை. நான் தாக்கல் செய்த சொத்து எனக்கு அல்லது என் கணவருக்கு சொந்தம் என்று நிரூபிக்க ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் என் கணவர் கூட்டுக்குடும்பத்தில் இருந்து சம்பாதித்தார், அதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. நான் தாக்கல் செய்த 12 ஆவணங்கள் எல்லாம் 23.06.2021 அன்று எனக்கு கொடுத்த அனுமதியை ரத்து செய்த பிறகு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இந்த ஆவணங்களை தவிர தாவா சொத்து தொடர்பாக வேறு ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பதில் உரையில் தாவா சொத்தில் 2வது மற்றும் 3வது மாடியை என் கணவர் தான் கட்டினார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். என் கணவர் என்னிடம் கூறியுள்ளார். என் பதில் உரையிலோ, முதன்மை வாக்குமூலத்திலோ

2வது மற்றும் 3வது மாடியை என் கணவர் தான் கட்டினார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். தாவா சொத்து 2ம் வாதி தேவராஜின் அப்பா தமிழ்நாடு அரசு வீட்டு வாரியம் மூலம் 1995 ம் வருடம் அடுக்குமாடி கிரையம் செய்து கொடுத்தது என்றால் சரியல்ல. என் கணவருக்கு தான் 3வது மாடி என்று சொல்லித்தான் என் கணவரை எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள். அரசாங்கத்தில் அந்த இடத்தை மண்ணாகத்தான் ஒதுக்கினார்கள். தேவராஜ் அப்போது 10ம் வகுப்பு படித்திருந்தார் என்றால் சரிதான். அவர் தந்தையுடன் ஆசாரி வேலை செய்து கட்டினார். வா.த.சா.ஆ.1 ன் படி ஒதுக்கீடு பெற்று அந்த சொத்தை வா.த.சா.ஆ.2 ன் படி 1ம் வாதிக்கு செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என் கணவர் இறந்தவுடன் கொடுத்துவிட்டார்கள். நான் 2வது தளத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்று நோட்டீஸில் கூறியுள்ளது என்றால் வாடகை, மின் கட்டணம், தண்ணீர் கட்டணம் கேட்டார்கள், நான் எதுவும் கொடுக்கவில்லை. என் கணவரின் வீட்டிற்கு நான் வாடகை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் இதுவரை ரூ.1,90,000/- நஷ்ட ஈடாகவும், மின் கட்டணம் மற்றும் இந்த வழக்கு செலவு ஆகியவற்றை கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன் என்றால் சரியல்ல.

**நேரம் 13.35 மணி.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.